Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 27, 2022

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 27, 2022 | ஒளி: 08 கதிர்: 108 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

வரலாறு காணாத வகையில்

## ஸ்டெர்லிங் பவுண்ட் பாரிய வீழ்ச்சி



அமெரிக்க டொலருக்கு நிகரான பிரித்தானிய ஸ்டெர்லிங் பவுண்ட், வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வாக்குறுதியளித்தமைக்கு அமைய, பிரித்தானியாவின் புதிய அரசாங்கம் வெள்ளிக்கிழமை (23) மேற்கொண்ட வரி குறைப்புகளைத் தொடர்ந்து, ஸ்டெர்லிங் பவுண்டின் மதிப்பு கணிசமாகக் குறைந்துள்ளது.

தொடர்ச்சி P2

அதியுயர் பாதுகாப்பு வலயம்

# புதிதல்ல

## அரசாங்கம் அறிவிப்பு

**6 மணி நேரத்துக்கு முன்னரே, அனுமதி பெறப்பட வேண்டும்**

**கட்சிகளுக்கிடையிலான போட்டிகளால் இந்தப் போராட்டங்கள்**



■ மஹேஸ்வரி விஜயனந்தன்

அண்மையில் ஜனாதிபதியால் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயம் என்பது, இலங்கைக்கோ சர்வதேசத்துக்கோ புதிய விடயம் அல்ல எனத் தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், ஜனாதிபதி நாடு திரும்பியதும் குறித்த வர்த்தமானி தொடர்பில், ஆராய்ந்து அதியுயர் பாதுகாப்பு வலய வர்த்தமானியை தொடர்ந்து கடைப்பிடிப்பதா, அதில் சில பகுதிகளை நீக்குவதா என்பது தொடர்பில் தீர்மானிப்பார் என்றார்.

தொடர்ச்சி P2

அதியுயர் பாதுகாப்பு வலயங்களை

# இரகசிய

## சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்த முடியாது

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

## வர்த்தமானியை வாபஸ் பெறுமாறு வலியுறுத்தல்

**தேசிய சட்டங்கள், சர்வதேச மற்றும் தேசிய மனித உரிமைகள் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளைப் பின்பற்றுவதை உறுதிசெய்யவும்**

உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தின் கீழ், அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தியமைக்கு எந்த நியாயமும் அடிப்படையும் இல்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கும், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை முற்றிலும் மீறும் பிரகடனத்தை வெளியிடுவதற்குமான அரசாங்கத்தின் அணுகுமுறை குறித்து ஆழ்ந்த கவலையடைவதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## ஏழு நாள் சிசு விற்பனை

### வாங்கியவர் கைது; தந்தைக்கு வலை

பிறந்து ஏழு நாள்களேயான சிசுவை 50,000 ரூபாய்க்கு வாங்கிய பெண்ணொருவரும் இடைத்தரகராக செயற்பட்ட ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தெரிவித்தது. சட்டவிரோத உறவால் பிறந்ததாக கூறப்படும் சிசு, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பிரசவிக்கப்பட்ட பின்னர், வீட்டுக்கு கொண்டு வரப்பட்டதுடன், சிசுவின் தந்தைக்கும் தாய்க்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மனுக்கள்

## ஜனாதிபதி ரணிலை நீக்கியது நீதிமன்றம்



### ஜனாதிபதிக்கு எதிராக வழக்குகளை தொடர முடியாது என அறிவிப்பு

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களில் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வழக்குகளை தொடர முடியாது என்று உயர்நீதிமன்றம், நேற்று (26) அறிவித்தது.

தொடர்ச்சி P2

சிறுபிள்ளை போல நடந்துகொள்கிறார் ரணில்



## பதிலடி கொடுக்க தேர்தல் வேண்டும்

■ பா.நிரோஸ்

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள பிரதேச சபை, நகர சபைகளுக்கான தேர்தலை இலங்கை தேர்தல் ஆணைக்குழு நடத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ள பேராயர் கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, இந்த அரசாங்கத்துக்கு பதில் வழங்குவதற்கான சந்தர்ப்பம் மக்களுக்குக் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள்

## வர்த்தமானியை சவாலுக்கு உட்படுத்தி மனுத்தாக்கல்

கொழும்பு மாவட்டத்துக்குள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தி ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தி, உயர்நீதிமன்றில் நேற்று (26) அடிப்படை உரிமைகள் மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

துப்பாக்கியைப் பயன்படுத்தி

## பொருளாதாரத்தை மறுசீரமைக்க முடியாது

■ பா.நிரோஸ்



துப்பாக்கிகளைப் பயன்படுத்தி நட்டில் பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ள முடியாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தான் தெரிவித்ததாகக் கூறும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா, மொட்டுக் கட்சியினரும், ஜே.வி.பியினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளோடு இணங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## திலீபனுக்கு நினைவு அஞ்சலி

■ எம்.றொசாந்த்

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த 'தியாக தீபம்' திலீபனின் 35ஆவது நினைவு தின நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று (26) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன. யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள 'தியாக தீபம்' திலீபனின் நினைவிடத்தில் தியாகி தீலிபன் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த நேரமான காலை 10.48 மணியளவில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமானது.

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடைச் சட்டத்தை

## இ.தொ.கா முன்பிருந்தே எதிர்க்கிறது

■ எஸ்.கணேசன்

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதே உண்மையான நல்லிணக்கத்தின் முதல் படியாக அமையும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## குற்றவாளிக் கூண்டில் பொலிஸார்

சோசலிச இளைஞர் அமைப்பினரால் இம்மாதம் செப்டெம்பர் 24ஆம் திகதி கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் மீது, எந்தவிதமான அடிப்படையுமின்றி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் நேற்று (26) அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தரமற்ற மசகு எண்ணெய் விவகாரம்

## தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை



மசகு எண்ணெயின் தரம் தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் சட்டரீதியாக பதிலளிக்கும் என மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (26) தெரிவித்தார்.


தொடர்ச்சி P2

## உண்மையான பயங்கரவாதிகள் யார்? மக்கள் கண்டறிய வேண்டும்

■ எஸ்.கணேசன்

'சிஸ்டம் சேஞ்ச்' (முறைமை மாற்றம்) கோரி போராடியவர்கள் இன்று தண்டிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராகவே பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. நாட்டுக்காக போராடிய அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர்.

தொடர்ச்சி P2



கடனை செலுத்த

## நாளாந்தம் 41,000 டொலர் வருமானம் ஈட்ட வேண்டும்

கொழும்பு, தாமரை கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கை பெற்ற கடனைத் தீர்க்க வேண்டுமானால், தாமரைக் கோபுரத்தின் மூலம் நாளாந்தம் 41,000 அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். தாமரைக் கோபுரத்தின் நிர்மாணத்துக்காக மொத்தமாக 105 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. தாமரைக் கோபுரம் கட்டப்பட்ட நிலத்தில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வேறு இடத்தில் வீடு வழங்குவதற்காக 4.5 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது. இந்நிலையில், மொத்த தொகையான 56 மில்லியன் அமெரிக்க டொலரை ஐந்தாண்டுகளில் செலுத்தி முடிக்க வேண்டும். எனவே, தாமரைக் கோபுரம், ஓர் இருண்ட படம் மட்டுமே என தெரிவித்துள்ளார்.




## நாடு அராஜகமாக மாறும் அபாயம்

உணவு, மருந்துக்கான போராட்டமானது எரிபொருள், எரிவாயுவுக்கான போராட்டத்தை விட ஆபத்தானது. இன்று அவ்வாறான மோசமான நிலையொன்றையே நாடு எதிர்கொண்டுள்ளது, எனவே, நாடு அராஜகமாக மாறும் அபாயம் உள்ளது என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

நாட்டின் அத்தியாவசிய தேவைகளுக்கான தட்டுப்பாடு குறித்த உண்மைகளை யார் மறைக்க முயன்றாலும் மிகமோசமான உணவு, மருந்து தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதே கசப்பான உண்மையாகும். மேலும் நாடு அராஜகமாக மாறும் அபாயம் உள்ளது.

இந்த நெருக்கடிக்கு உலகம் முழுவதும் சென்று பிச்சை எடுப்பது தீர்வல்ல. மக்கள் எழுச்சியை நசுக்கும் திட்டங்களை தீட்டுவது இந்த நெருக்கடிக்கு தீர்வாகாது. இவ்வாறான நெருக்கடி நிலைமைகளை கையாள அரசாங்கம் மாற்று தீர்வுகளை சிந்திக்கவில்லை. தேசிய ரீதியிலான உற்பத்திகளுக்கு முன்னுரிமை கொடுக்க முடியும்.

நம் நாட்டில் வேலையின்மையால் தவிக்கும் இளைஞர்கள், பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று எங்களுக்கு வேலை தர வேண்டும் என்று போராடுகிறார்கள். சரித்திரம் முழுவதுமே,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# புதிதல்ல

நேற்று (26) அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என்பது மக்களின் உரிமைகள். ஆனால் அந்தப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களால் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுமாயின் அந்த ஆர்ப்பாட்டங்கள் தடுத்து நிறுத்தப்படும் என்றார்.

நாட்டின் நடைமுறைச் சட்டத்தின்படி ஆர்ப்பாட்டமோ போராட்டமோ நடத்துவதற்கு 6 மணி நேரத்துக்கு முன்னரே, பொலிஸ் அல்லது பாதுகாப்பு தரப்பினரிடம் அனுமதி பெறப்பட வேண்டும். அனுமதிப் பெற்று ஆர்ப்பாட்டங்களை நடத்துவதில் எவ்வித சிக்கலும் இல்லை என்றார்.

ஆனால் தற்போது முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் எவ்வித அனுமதியும் இன்றி முன்னெடுக்கப்படுவதால், அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகள் பாதுகாப்பு தரப்பினரால் முன்னெடுக்கப்படும் என்றார்.

சவாலான பின்னணியில் நாட்டில் பிரச்சினைகளை உருவாக்க சில குழுவினர் செயற்படுவதாகத் தெரிவித்த அவர், சில தொழிற்சங்கங்களும், பல்கலைக்கழக மாணவர் சங்கங்களும் சில அரசியல் கட்சிகளின் ஒழுங்கு நிரலுக்கு அமைய செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் எந்த கட்சிக்கு ஊடகங்களின் ஆதரவு அதிகம் உள்ளது. எந்த கட்சியின் போராட்டங்களுக்கு அதிகம் மக்கள் வருகின்றனர் என்றதொரு போட்டி நிலை கட்சிகளுக்கிடையில் காணப்படுவதாகவும் அதனை அடிப்படையாக வைத்தே, இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

## ஏழு நாள் சிசு விற்பனை

அதன்பின்னர், அநுராதபுரம், மல்வத்து ஒழுங்கையை சேர்ந்த 21 வயதுடைய சிசுவின் தாயார் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சிசு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கபிதிகொல்லேவ வஹல்கட பிரதேசத்தில் வசிக்கும் பெண்ணொருவரும், சம்பவத்துக்கு இடைத்தரகராக செயற்பட்ட அநுராதபுரத்தைச் சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதி ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

தந்தையே சிசுவை விற்பனை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் தற்போது அவர் பிரதேசத்தில் இருந்து காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாயின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதாரங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே சிசு மீட்கப்பட்டுள்ளதுடன், சிசுவை விற்பதற்கு வைத்தியசாலையின் தாதி மற்றும் உதவியாளர் உதவியிருக்கலாம் என்றும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வர்த்தமானியை சவாலுக்கு உட்படுத்தி மனுத்தாக்கல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாவட்டத்தில் பல பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி வெள்ளிக்கிழமை (23) அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.

அதனை சவாலுக்கு உட்படுத்தியே சோசலிச இளைஞர் சங்கத்தின் செயற்பாட்டாளரால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் அல்லது பிரதிப் பொலிஸ்மா அதிபரின் முன்அனுமதியின்றி குறித்த அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் கூட்டங்கள் அல்லது ஊர்வலங்களை நடத்த முடியாது என வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வளாகம், உயர் நீதிமன்ற வளாகம், மேல் நீதிமன்ற வளாகம், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற வளாகம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, இலங்கை கடற்படைத் தலைமையகம், பொலிஸ் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் அக்குரேகொட இலங்கை இராணுவத் தலைமையகம், கொம்பனித் தெரு விமானப் படைத் தலைமையகம் மற்றும் பிளவர் வீதியில் உள்ள பிரதமர் அலுவலகம் ஆகியவை அதியுயர் பாதுகாப்பு வலயங்காகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

சோசலிச இளைஞர் சங்கத்தினால் கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்திலிருந்து கோட்டை நோக்கி சனிக்கிழமை (24) ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தடுக்கப்பட்டு, 83 ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரத்தை...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து வருகிறார்கள். தற்போதைய நிலைமையைப் புரிந்துகொண்டும், ஐக்கிய மக்கள் சக்தி மீதுள்ள நம்பிக்கையிலுமே இவர்கள் எம்மோடு இணைந்து வருகிறார்கள் எனவும் தெரிவித்தார். மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளோடு தற்போது இணங்கி வருகிறது. குறிப்பாக அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தியுடன் கலந்துரையாடியிருந்தேன். என்னோடு நூற்றுக்கு நூறு சதவீதம் ஒத்துப்போவதில்லை என்றாலும், அடிப்படையான விடயங்களில் ஒத்துப்போவதாக ஹந்துநெத்தி தன்னிடம் கூறினார். அதுபோல, நாட்டை சுற்றியிருக்கும் மதில்களை உடைத்து பாலங்களை அமைத்து வெளிநாடுகளுடன் தொடர்புகளைப் பேண வேண்டும் என்றே தான் அவரிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

இலங்கை மக்கள் போராடுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார்கள் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் நியுயோர்க்கில் நடைபெற்று வரும் ஐ.நா பொதுச்சபை அமர்வில் உரையாற்றிக்கொண்டிருக்கும்போதே போராட்டக்காரர்கள் மீது இலங்கையில் தாக்குதல் நடத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

துப்பாக்கியைப் பயன்படுத்தி பொருளாதார மறுசீரமைப்பை நாட்டில் மேற்கொள்ள முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தனிப்பட்ட ரீதியாகவும், பாராளுமன்றத்தில் வைத்தும் தான் கூறியதாகவும், அரசாங்க நிதி பற்றியக் குழுவின் தலைவர் என்கிற ரீதியிலும், எதிர்க்கட்சி என்கிற ரீதியில் அரசாங்கம் ஒத்துழைக்க விரும்பினாலும், அரசாங்கத்தின் இதுபோன்ற அடக்குமுறைகள் காரணமாக ஒத்துழைக்க முடியாது என்றார்.

## உண்மையான பயங்கரவாதிகள்...

உண்மையான பயங்கரவாதிகள் யாரென்பதை மக்கள் கண்டறிய வேண்டும். என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், பயங்கரவாத தடைச்சட்டம் என இச்சட்டத்துக்கு பெயர் இருந்தாலும், பயங்கரவாத தடுப்புக்கு எதிராக பயன்படுத்துவதில்லை. மாறாக சாதாரண மக்கள் தற்போது இலக்கு வைக்கப்படுகின்றனர். பயங்கரவாத தடைச்சட்டத்திலுள்ள சரத்துகள் பயங்கரமானவை என்றார்.

## குற்றவாளிக் கூண்டில் பொலிஸார்

இந்த போராட்டத்தின் போது பொலிஸாரால் தாக்குதலுக்குள்ளான ஒவ்வொருவரும் தனித்தனியாக அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்போவதாக சட்டத்தரணி சுனில் வடகல தெரிவித்துள்ளார்.

போராட்டத்தின் போது தாக்கப்படுவதற்கும் எந்தவிதமான சட்ட அடிப்படைகளையும் பொலிஸார் நீதிமன்றத்தில் முன்வைக்கவில்லை. அதுபோல போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதலை மேற்கொள்வது முழுமையாக சட்டவிரோதமானது. இத்தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸாரைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற வேண்டும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

## தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கூட்டுத்தாபனத்திடம் போதியளவு டீசல் மற்றும் உலை எண்ணெய் கையிருப்பு உள்ளது என்றும் அமைச்சர் தனது டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியிருந்தார்.

லக்ஷபான மின்நிலையத்தில் ஏற்பட்ட செயலிழப்பு, நீர் மின்சார முகாமைத்துவ பிரச்சினை மற்றும் டீசல் மற்றும் உலை எண்ணெய்க்கு போதிய நிதி இன்மை ஆகிய காரணங்களாலேயே இலங்கை மின்சார சபையால் மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க கோரிக்கை விடுக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

தவறான வகை மசகு எண்ணெயை இலங்கை அதிகாரிகள் இறக்குமதி செய்ததால் மின்வெட்டு நீடிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்ததையடுத்தே அமைச்சரால் மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயில் உள்ள நாப்தாவில் அதிக அளவு கந்தகம் உள்ளதால் அதை மின்சாரம் தயாரிக்க பயன்படுத்த முடியாது என்றும் அதை இப்போது குடிக்கவே முடியும் என்றும் அவர் ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்டெர்லிங் பவுண்ட் பாரிய வீழ்ச்சி

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில், 1971ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரித்தானிய ஸ்டெர்லிங் பவுண்ட் இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரித்தானிய அரசாங்கத்தின் வரிக்குறைப்பு அறிவிப்பைத் தொடர்ந்து, உலகெங்கிலும் உள்ள சந்தைகளில் பவுண்டின் மதிப்பு கடுமையாகக் குறைந்துள்ளது.

அதற்கமைய ஆசிய சந்தையில் ஒரு ஸ்டெர்லிங் பவுண்டின் விலை 1.038 டொலர்களாகக் காணப்பட்டதுடன், அதன் பெறுமதி 4 சதவீத்தால் சரிந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் வெள்ளிக்கிழமை சந்தை நிலவரத்துக்கு அமைய 401.58 ரூபாயாகக் காணப்பட்ட ஸ்டெர்லிங் பவுண்ட் ஒன்றின் கொள்வனவு விலை நேற்றையதினம் 376.70 ரூபாயாகக் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அத்துடன், வெள்ளிக்கிழமையன்று 417.39 ரூபாயாகக் காணப்பட்ட விற்பனை விலையும் 391.95 ரூபாய் என்ற அளவுக்கு நேற்றையதினம் கணிசமாகக் குறைந்துள்ளதாக மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

# இரகசிய

## சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்த...

அதியுயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்துவதற்கு அதிகாரப்பூர்வ இரகசியச் சட்டத்தை ஏற்க முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்துவதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

செப்டம்பர் 23 திகதியிட்ட எண் 2298/53ஐக் கொண்ட வர்த்தமானியை வாபஸ் பெறுமாறும் அரசாங்கத்தை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

தேசிய சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மற்றும் தேசிய மனித உரிமைகள் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளைப் பின்பற்றுவதை உறுதிசெய்யவும், அந்த விதிமுறைகளை மீறும் அறிவிப்புகளைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## ஜனாதிபதி ரணிலை நீக்கியது நீதிமன்றம்

அதன்போது, தற்போதைய ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளை தொடர தடை விதிக்கப்பட்டுள்ளதாக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான குழாம் அறிவித்தது.

அரசியலமைப்பின் 35(1) சரத்தின் அடிப்படையில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களில் இருந்து தனது கட்சிக்காரரை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்தார்.

அரசியலமைப்பின் 35 ஆவது சரத்தின் விலக்குரிமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாக அமையும் எனவும் அவருக்கு எதிரான அடிப்படை உரிமை மனுக்களை தொடர முடியாது எனவும் பிரதம நீதியரசர் அறிவித்தார். 35(1) சரத்துக்கு அமைய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ கடமைகள் மற்றும் செயல்பாடுகளை முழுமையாகச் செய்வதில் அவருக்கு இடையூறு அல்லது கவனச்சிதறல் ஏற்படுத்தும் எந்தவிதமான துன்புறுத்தலில் இருந்தும் ஜனாதிபதி விடுவிக்கப்பட வேண்டியது முக்கியம் என்று அமர்வு சுட்டிக்காட்டியது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அவருக்கு எதிராக எந்த விதமான விலக்கு சக்தியும் இல்லாத காரணத்தினால் அவருக்கு எதிரான வழக்குகள் தொடர வேண்டியுள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்ததுடன், மனுக்களின் பரிசீலனைக்கான தினமான 29ஆம் திகதியை அறிவித்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உட்பட 12 மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில், பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமானவர்களைத் தண்டிக்க உத்தரவிடுமாறும் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திலீபனுக்காக...

பல பாகங்களில் இருந்தும் ஊர்திகள் பவனி காலை 10 மணி முதல் நல்லூர் தியாக தீபம் திலீபனுடைய நினைவாலயத்தை வந்தடைந்த வண்ணம் இருந்தன. அதேவேளை கைதடி பகுதியில் இருந்து இரு இளைஞர்கள் தூக்குக்காவடி எடுத்து தியாக தீபத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

1). மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4). ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987.09.15ஆம் திகதி நீராகாரமின்றி உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்த தியாக தீபம் திலீபன் 12 நாட்களாக நீராகாரமின்றி இருந்து 26ஆம் திகதி உயிர் நீத்தார்.

## பதிலடி கொடுக்க தேர்தல் வேண்டும்

ஜனாதிபதியின் தேவைக்கு ஏற்ப தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமாக இருந்தால், தேர்தல் ஆணைக்குழு காட்டிக்கொடுப்பையே செய்யும் எனவும் தெரிவித்தார்.

பெருந்தெருக்களையும், தாமரைக் கோபுரங்களையும், விமானங்களே வந்து செல்லாத விமான நிலையம் என்பன நாட்டில் அமைக்கப்பட்டிருந்தாலும், இலங்கையில் அதிகமான மக்கள் ஒருவேளை உணவின்றி வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்றார்.

நாட்டு மக்கள் வாழ முடியாத நிலையில் இருக்கும்போது நாட்டுத் தலைவர் சந்தோசமாக இருக்கிறார். பாராளுமன்றத்தில் நன்றாக சாப்பிட்டுக் குடித்து சில அரசியல்வாதிகளுக்கு ஆடைகள் அணிய முடியாதளவுக்கு உடல் பருமன் பெருத்துவிட்டது.

உலக நாடுகளிடம் பிச்சை எடுத்து பிழைக்கும் நாடாக இலங்கை மாறிவிட்டது. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறுபிள்ளைப் போல நடந்துக்கொள்கிறார். பொறுப்புள்ள தலைவர் இவ்வாறு நடந்துக்கொள்வாரா? ஆசியாவின் ஆச்சரியம் என இலங்கையை கடந்த காலங்களில் கூறினார்கள். இது தான் இலங்கையின் ஆச்சரியம் என்றார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணைகள் அப்படியே இருக்கின்றன. இத்தாக்குதலை செய்தது யார்? இதன் பின்னணியில் இருந்தவர்களை கண்டுப்பிடித்துவிட்டார்களா? இல்லை. எதுவுமே நடக்கவில்லை. ஆனால் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர், யுவதிகள் 4 ஆயிரம் பேரை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அரசாங்கத்துக்கு வேண்டுமென்றால் நாட்டில் உள்ள அனைவரையும் சிறையில் அடைக்க முடியும். இதுவா ஜனநாயகம் எனவும் கேள்வி எழுப்பினார். 4 ஆயிரம் இளைஞர், யுவதிகளை சிறையில் அடைத்துவிட்டு இங்கிலாந்து இளவரசர்கள் முன்பாக சென்று இலங்கை ஒரு ஜனநாயக நாடென காண்பிக்கிறார்கள் எனவும் கூறினார்.

## நாடு அராஜகமாக மாறும் அபாயம்

அரசு வேலை பிரச்சனைக்கு, வேலையில்லாத இளைஞர்களுக்கு, பொய்யான பெயரில் அரசு வேலை கொடுப்பதன் மூலம் தீர்வு காணப்பட்டது. எனவே, உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத வகையில் இலங்கையில் மிகப்பெரிய பொதுச் சேவை உள்ளது. இது குறைக்கப்பட வேண்டும். ஆனால் ஓய்வு பெறும் வயதைக் குறைப்பதன் மூலம் அரசின் செலவுகள் அதிகரிக்கும், குறையாது எனக் குறிப்பிட்டார்.

## இ.தொ.கா முன்பிருந்தே எதிர்க்கிறது

நுவரெலியா- ரிகில்கஸ்கட பகுதியில் நேற்று (26) நடைபெற்ற பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்து திரட்டும் நடவடிக்கையில் கையெழுத்திட்ட பின்னர், நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

அரசியல் வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளது. இதற்கமையவே சாணக்கியன் எம்.பி. விடுத்த அழைப்பை ஏற்று மனுவில் நானும் கையொப்பம் இட்டேன்.

இற்றைக்கு 43 ஆண்டுகளுக்கு முன்னர் தற்காலிக தீர்வாகவே பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் போர் முடிவடைந்து பல வருடங்கள் கடந்தும் அந்த சட்டம் நீடிக்கின்றது. இதனை ஏற்க முடியாது. உண்மையான ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தின் முதல்படியாக அச்சட்டத்தை நீக்க வேண்டும்.

இது தொடர்பில் நாம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். பயங்கரவாத தடைச்சட்டத்தை காங்கிரஸ் தற்போது எதிர்க்கவில்லை. முன்னர் இருந்தே எதிர்த்து வருகின்றோம். எமது மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நீதிமன்றம்கூட சென்றுள்ளார்." - என்றார்.

## உயர் பாதுகாப்பு வலயங்களினால்

# மக்களுக்கு பல்வேறு இன்னல்கள்

■ பா.நிரோஸ்

மக்களுக்கு பயந்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்துள்ளதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக, உயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு இதனால் பல்வேறு சிக்கல் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். நாட்டில் பிள்ளைகள் மந்தபோசனையில் இருக்கும் நிலையில் ஆளுந்தரப்பினருக்கு போசாக்கு வழங்குவதற்காக இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்கள் அந்த வீதிகளில் இனி பயணிக்க வேண்டும் என்றால் பொலிஸ்மா அதிபர் அல்லது மேல்மாகாணத்துக்குப் பொறுப்பான



சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் அனுமதியைப் பெற வேண்டும். இந்த வீதிகளில் நடந்தோ அல்லது வாகனங்களிலோ செல்ல முடியாது எனவும் தெரிவித்தார்.

இதனை மீறி அந்த வீதிகளில் பயணிப்போர் கைது செய்யப்படும் பட்சத்தில் அவர்களுக்கு உயர்நீதிமன்றமே பிணை வழங்கும். ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை உள்ளிட்ட இடங்களே உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக கோட்டாகோகமவும், அலரிமாளிகைக்கு முன்பாக மைனாகோகமவும் அமைக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு வந்து போராட்டங்களில் ஈடுபட்டனர் எனவும் தெரிவித்தார்.

## அரசாங்கத்தின் செயற்பாடுகள் நல்லதல்ல

■ பா.நிரோஸ்

கொழும்பில் புதிதாக ஏன் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்தார்கள் என அமைத்தவர்களிடமே கேட்க வேண்டும் என தெரிவிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, இதுபோன்ற செயற்பாடுகள் நல்லதல்ல. அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் எழுச்சி இதனால் மேலும் அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகருமான எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்கவின் நினைவு தினம், அக்கட்சியின் தற்போதைய தலைவர் மைத்திரி தலைமையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (26) அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மைத்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார். இடதுசாரி கட்சிகள் அனைத்தையும் இணைத்துக்கொண்டு எதிர்காலத்தில் கூட்டணி ஒன்றை அமைப்போம். இதனூடாக மக்கள் ஆட்சியை நாட்டில் அமைப்போம் என்றார்.இ தேவேளை, கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை ஏன் அமைத்தார்கள் என அமைத்தவர்களிடம் கேள்வி கேட்க வேண்டும். இது நல்லதல்ல. இதுபோன்ற செயற்பாடுகளால் மக்கள் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் எழுச்சி வலுவடையும் எனவும் மைத்திரி தெரிவித்தார்.

## பிரச்சினைகளை தீர்க்கவே ரணிலை ஆதரித்தோம்

■ பாலித ஆரியவன்ஸ

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கியது அவரது கட்சியை வளர்க்கவோ அவரது அரசியல் பயணத்துக்கு உதவி செய்வதற்காகவோ அல்ல. மாறாக நாட்டின் இன்றைய சவால் மிக்க நிலையில் அந்த பிரச்சினைகளுக்கு ஏதாவது தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நேற்று (26) பதுளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர 14 வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்திருந்தவர். 14 வருடங்கள் ரணிலின் வீடு, சிறிகொத்தாவுக்கு அருகில் இருந்தவர். ஆனால் நானோ, அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வாவோ சிறிகொத்த பக்கம் கூட சென்றதில்லை. ஆனால் தயாசிறி 14 வருடங்கள் சிறிகொத்தாவில் இருந்து தான் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்குள் வந்தார். அதேபோல் 2015இல் எமது கட்சியின் பொது செயலாளராக இருந்த



மைத்திரிபால சிறிசேன, சிறிகொத்தாவுக்கு சென்று ரணிலை கும்பிட்டு, ரணிலின் ஜனாதிபதி பதவியைப் பெற்றுக்கொண்டு பதுளைக்கு வந்து ஒரே மேடையில் நின்றார். தான் அதற்கு செல்லவில்லை.

இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை இருவர் உரிமையாக்கிக் கொள்ளப் பார்க்கின்றனர். அந்த இருவரையும் விட கட்சியில் நிமல் ஸ்ரீபாலடீ சில்வா, மஹிந்த அமரவீர, ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய உள்ளிட்ட பலர் இருக்கின்றனர். இன்று பாராளுமன்றத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 14 பேரில் 9 பேர் எங்களுடன் இருக்கின்றனர். நாம் கட்சியை விட்டுச் செல்ல மாட்டோம் எனவும் தெரிவித்தார்.





## இஸ்லாமிய வழிபாடுகளில் இராணுவத்தினர்



இராணுவத்தின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொள்ளுபிட்டி ஜும்மா பள்ளிவாசலில் இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் மற்றும் இஸ்லாமிய மத முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இராணுவத்திற்கு ஆசி வேண்டி சிறப்பு இஸ்லாமிய மத வழிபாடுகள் இடம்பெறுவதைப் படங்களில் காணலாம்...



## பாராளுமன்ற நடைமுறைகள் குறித்த பாடநெறி ஆரம்பம்

இலங்கை பாராளுமன்றம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் என்பன இணைந்து வரலாற்றில் முதல் தடவையாக பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த குறுகியகால பாடநெறியொன்றை ஆரம்பித்துள்ளன..

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக் கொள்கைகள் திணைக்களத்தின் இறுதியாண்டு பட்டதாரி மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பாடநெறியின் வளவாளர்களாக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் மற்றும் பாராளுமன்ற செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் காணப்படுகின்றனர். இலங்கை பாராளுமன்றம் பல்கலைக்கழகமொன்றுடன் இணைந்து இவ்வாறான கல்விப் பாடநெறியொன்றை ஆரம்பித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்தப் பாடநெறியின் ஊடாக ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற செயற்பாடுகள், பாராளுமன்றத்தின் சட்டவாக்க நடைமுறைகள், பாராளுமன்ற அமைப்பின் பரிணாமம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவை, நிலையியற் கட்டளைகள், பொதுமக்கள் சேவைச் செயற்பாட்டுக்கான தொடர்பு, பெண்கள் பிரதிநிதித்துவம் போன்ற விடயதானங்கள் குறித்து புரிதல்கள் இந்தப் பாடநெறியின் ஊடாக வழங்கப்படவுள்ளது. பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பாடநெறியில் நான்கு விரிவுரைகள் மற்றும் பாராளுமன்ற சுற்றுப்பயணம் என்பன உள்ளடங்கியுள்ளன.

## ஒரு முட்டையை பெற்றுக்கொடுக்க வழியில்லை

# கோபுரம் அமைக்கின்றனர்

உணவுகளின்றி பாடசாலை மாணவர்கள் தினந்தோறும் பாடசாலைகளில் மயங்கி விழுவதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார். ஒரு முட்டையை பெற்றுக்கொடுப்பதற்குக் கூட வசதியில்லாத நிலையில் இவர்கள் கோபுரங்களை அமைப்பதற்கே பணத்தை நாசம் செய்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

திரிபோஷா தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு விளக்கமளிக்க வேண்டும் என வலியுறுத்தி தாய்மார்களுடன் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய சுகாதார அமைச்சுக்கு நேற்று (26) சென்றிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலைகளில் மாணவர்கள் பட்டிணியால் மயங்கி விழுவது தொடர்பான முறைப்பாடுகள் தினந்தோறும் கிடைக்கின்றன. ஒரு முட்டையை பெற்றுக்கொடுப்பதற்குக் கூட வசதியில்லாத நிலையில் இவர்கள் கோபுரங்களை அமைப்பதற்கே பணத்தை நாசம் செய்கிறார்கள். பிள்ளைகளுக்கு மூன்றுவேளை உணவுக் கிடைக்காத சந்தர்ப்பத்தில் திரிபோஷாவே அவர்களுக்குப் பிரதான உணவாக இருக்கிறது என்றார். எனவே, இது தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு சுகாதார அமைச்சர் அறிவிக்க வேண்டும். ஆனால் அதனை செய்யாது போலியான தகவல்கள் எனக்கூறி புறக்கணிக்க முடியாது. பிள்ளைகளின் வாழ்க்கையோடு விளையாடுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றார்.

திரிபோஷா தொடர்பில் தற்போது உருவாகியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் எமக்கு சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதுபோன்ற பிரச்சினைகளை உருவாக்கி திரிபோஷாவை சந்தைகளில் இல்லாது செய்து வேறு எதனையும் கொண்டுவருவதற்கு சதி செய்கிறார்களா? என சந்தேகம் எழுவதாகவும் தெரிவித்தார்.



## ஐ.நா பிரதிநிதிகள் குழு – அமைச்சர் விஜயதாச சந்திப்பு

ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை நேற்று (26) சந்தித்து கலந்துரையாடியுள்ளார். குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான கட்டளை சட்டங்கள், குழந்தைகளுக்கான மறுவாழ்வு அளித்தல், நீதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நீதித்துறை அமைச்சகத்தின் முன்முயற்சியில் குழுக்களை நியமித்தல் ,பள்ளிப்பருவ குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

## பதில் அமைச்சர்கள் நியமனம்


ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள நிலையில், ஜனாதிபதி வெளிநாட்டில் இருக்கும் சமயத்தில் பணியாற்றுவதற்காக, பதில் அமைச்சர்களை நியமித்துள்ளார். இதன்படி, பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரமித பண்டார தென்னகோன், நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை பதில் அமைச்சராக ஷெஹான் சேமசிங்க, முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராக திலும் அமுனுகம, தொழில்நுட்ப பதில் அமைச்சராக ராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பெண்கள் சிறுவர் விவகாரம் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக ராஜாங்க அமைச்சர் அனுபா பெஸ்குவல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மே 09 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில்

# விசேட குழுவின் அறிக்கை விரைவில் பாராளுமன்றத்தில்

மே 09ஆம் திகதி மற்றும் அதனை அண்மித்த தினங்களில் நாட்டில் இடம்பெற்ற வன்முறையான சம்பவங்கள் தொடர்பான விசேட குழுவின் அறிக்கை கடந்த 08ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கமைய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அமைச்சரவை மற்றும் பராளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட, முன்னாள் விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலக



மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்னாயக (ஓய்வுபெற்ற) ஆகியோரை உள்ளடக்கிய குழு இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்திருப்பதாகவும், பாதுகாப்புத் துறையில் ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டிருந்தால் எதிர்காலத்தில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

மே 09ஆம் திகதி மற்றும் அதனை அண்மித்த தினங்களில் இந்நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பில் குறைபாடுகள் ஏதும் ஏற்பட்டிருந்ததா என்றும், இவற்றுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக எடுத்துள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பது தொடர்பிலும் உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## அரச, தனியார் வைத்தியசாலைகளில்

# கடும் மருந்து தட்டுப்பாடு

அரச, தனியார் வைத்தியசாலைகளில் கடுமையான மருந்து தட்டுப்பாடுகள் நிலவி வருவதாக முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இதுபோல முன்னொருபோதும் மருந்து தட்டுப்பாடுகளுக்கு நாடு முகங்கொடுத்ததில்லை. உயிர் பாதுகாப்பு மருந்துகளுக்குக் கூட நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு



பொருளாதார நெருக்கடி காரணமல்ல எனவும் தெரிவித்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலும் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த போதிலும் இதுபோல கடுமையான தட்டுப்பாடுகளுக்கு எமது அரசாங்கம் முகங்கொடுத்ததில்லை எனவும், மருந்து தட்டுப்பாடுகளை கட்டுப்படுத்தவும் கையிருப்பில் உள்ள மருந்துகள் தொடர்பான தரவுகளை ஆராய்வதற்கும் கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்களை இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் கைவிட்டுள்ளதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

மருந்து பொருள்களை கொள்வனவு செய்வதற்காக கிடைத்த நிதியை கடந்த 6 மாதங்களுக்கு மேலாக அரசாங்கம் பயன்படுத்தவில்லை எனவும் குற்றஞ்சுமத்தினார்.

# குழப்பம் விளைவித்த காங்கிரஸ் கட்சியினர்

எம்.றொசாந்த்

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் எல்லை மீறி முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பத்தினர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், சக கட்சியினர் என அனைத்து தரப்புகளுடனும்



வலிந்து முரண்பாடுகளை ஏற்படுத்தி அநாகரிகமான முறையில் நடந்து கொண்டனர்.

அவர்கள் அவ்வாறு அநாகரிகமான முறையில் நடந்து கொண்டிருந்த போது, அவர்களை கட்டுப்படுத்தாது, அருகில் இருந்த கொட்டகைக்குள் இருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தமை அங்கிருந்த பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது.



## யாழ். பல்கலைக்கழகத்தில் திலீபனின் நினைவேந்தல்

நிதர்சன் வினோத்

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் 'தியாகதீபம்' திலீபனின் நினைவேந்தல் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள திலீபனின் நினைவாலயத்தில் நேற்று (26) காலை உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மாணவர்களால் ஈகைச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கத்தினர், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாணத்தில் குண்டு வீச்சு

செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம், தாவடி பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள், பெட்றோல் குண்டு வீசியுள்ளதுடன் வன்முறையில் ஈடுபட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் நேற்று முன்தினம் (25) வந்த ஆறு பேர் கொண்ட குழுவே இவ்வாறு வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

பெட்ரோல் குண்டை வீசியது மட்டுமன்றி, வீட்டில் இருந்த சொத்துகளுக்கும் தீ வைத்துள்ளனர். வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தால், 18 இலட்சம் ரூபாய் பெறுமதியான



சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவத்தினை மேற்கொண்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த சுன்னாகம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## சதிகளைத் தாண்டி நினைவுகூரப்பட்டார்

நிதர்சன் வினோத்

அரச புலனாய்வாளர்களால் இயக்கப்படுபவர்களின் சதிகளைத் தாண்டி, 'தியாகதீபம்' நினைவுகூரப்பட்டார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

"சதிகாரர்களின் முகமூடிகள் கழன்றன. பொய்ச் செய்திகளைப் பரப்புவதில் அரச ஆதரவு



ஊடகங்கள் தீவிரம். மக்களுக்கு உண்மையை உரைக்கச் சகல விடயங்களும் ஆதாரங்களும் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும்.

தமிழ்த் தேசிய வரலாறு கடத்தப்படுவதை எவராலும் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது" என்றுள்ளார்.

## வணிக நிலையங்களை பூட்டி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் 'தியாக தீபம்' திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

தமிழ் மக்களின் வாழ்வுக்காய் 1987ஆம் ஆண்டு ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூரின் வீதியில் 12 நாள்கள் நீராகாரம் ஏதுமின்றி, உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த 'தியாக தீபம்' திலீபனின் 35 ஆம் ஆண்டு நிறைவு நாள் இன்றாகும்.

'தியாக தீபம்' திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தமிழர் தாயக பகுதிகள் மற்றும் புலம்பெயர் நாடுகளிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று (26) காலை 8.30 மணியளவில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்த சங்கத்தின் ஏற்பாட்டில் திலீபனின் நினைவு நிகழ்வு நடைபெற்றது.

## 'ஓடிகலோன்' குடித்த 'குடிமகன்' மரணம்

செந்தூரன் பிரதீபன்

மதுபானம் விலை ஏறியதால், அதற்கு பதிலாக ஒடிகலோனை குடித்து வந்த 54 வயதுடைய நபரொருவர் மயக்கமடைந்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு உள்ளே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (25) இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், ரயில் நிலைய வீதியை வசிப்பிடமாகக் கொண்ட, மார்க்கண்டு திருக்குமரன் (வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் மனைவியை பிரிந்து வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதுடன் மட்டுமல்லாது, மதுபான விலையும் அதிகரித்துள்ளது. மதுபானம் வாங்க முடியாத நிலையில், இவர் தொடர்ச்சியாக ஒடிகலோன் குடித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றைய மதியம் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்குள் மயங்கி விழுந்து, உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.




## உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்த சந்தை

பாஸ்பரன்

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் விற்பனைச் சந்தை நேற்று (26) இடம்பெற்றது

குறித்த பிரதேச விற்பனைச் சந்தையின் ஆரம்ப நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் சம்பிராதயபூர்வமாக நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது பல்வேறு உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைக் கண்காட்சி கூடங்கள் அமைக்கபட்டிருந்தன

மேற்படி பிரதேச விற்பனைச் சந்தையின் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோதர்கள், சிறு தொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர்

## நயினாதீவில் நவராத்திரி விசேட பூஜை

எம்.றொசாந்த்

நவராத்திரி விரதம் நேற்று (26) ஆரம்பமான நிலையில், நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று அம்மன் உள்வீதி உலாவந்தார்.



கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்:

# தமிழர்களின் உரிமைகளை அரசாங்கம் புறக்கணிக்கிறது

### முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் காட்டம்.

வி. ரி சகாதேவராஜா

இலங்கை அரசாங்கம், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை புறக்கணிக்கிறது. உதாரணமாக, அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு செயலகத்தில் உள்ள சிவில் நிர்வாகம், மூன்று தசாப்தங்களாக தமிழ்ச் சமூகங்களுக்குத் தீர்வின்றி, சமத்துவமின்மை மற்றும் முரண்பாடுகளை உருவாக்கியமை குறித்து, ஐக்கிய நாடுகள் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. கே கோடீஸ்வரன் தெரிவித்தார்.

ஜெனீவாவில் நடைபெற்ற 51ஆவது கூட்டத்தொடரில், ஒன்றரை நிமிட உரையின் போதே இவ்வாறு பதிவுசெய்ததாகவும் தெரிவித்தார். இதுகுறித்து, அவர் மேலும்



பேசுகையில் தெரிவித்ததாவது:

இலங்கை தொடர்பான ஆரம்ப தீர்மானம், 19/2 (2012 மார்ச்) மற்றும் 22/1 (2013 மார்ச்) இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் வகையில் பெயரிடப்பட்டது. எவ்வாறாயினும், 25/1 (2014 மார்ச்) தீர்மானத்தின் பின்னர், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது என தீர்மானம் மறுபெயரிடப்பட்டது.

முழு தீவின் மனித உரிமைகள், ஐக்கிய நாடுகளாலும் இந்தச் சபையாலும் பேசப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

மேலும், இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை புறக்கணிக்கிறது. உதாரணமாக, கல்முனை வடக்கு செயலகத்தில் உள்ள சிவில் நிர்வாகம், மூன்று தசாப்தங்களாக தமிழ்ச் சமூகங்களுக்குத் தீர்வின்றி, சமத்துவமின்மை மற்றும் முரண்பாடுகளை உருவாக்கியது. பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் தாயகத்தில் கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலையை எதிர்கொள்கின்றனர். மனித உரிமைகள் பேரவையின் தீர்மான செயல்முறையானது சர்வதேச குற்றங்களின், குறிப்பாக இனப்படுகொலை குற்றங்களின் பொறுப்புக்கூறலில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் என்று ஐ.நாவில் பதிவுசெய்ததாகச் சொன்னார்.




வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கு

## பயிர்விதைகள், நாற்றுகள் வழங்கி வைப்பு

எஸ். கார்த்திகேசு

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் உணவுப் பஞ்சத்தை ஏதிர்கொள்ளாது, போசாக்குடனான உணவுத் தேவையை தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்துடன் திருக்கோவில் பிரதேசத்தில் மரக்கறிப் பயிர்கள், நாற்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேசத்தில், வீட்டுத் தோட்டப் பயனாளிகளை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் 'லண்டன் றே ஓவ் ஹோாப்' நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் அம்பாறை மாவட்ட 'நாமே நமக்கு' எனும் அமைப்பின் ஊடாக, கிராமங்கள் தோறும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 200 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக இவ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திட்ட இணைப்பாளர் கண்ணன், திருக்கோவில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் தினேஷ் ஆகியோரின் இணை ஒருங்கிணைப்பில் திருக்கோவில் பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக, வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்ட வருகின்றன.

## மனநிலையை மாற்றி அமைத்தவர் யுவராஜ்





வி. ரி சகாதேவராஜா

மட்டுநகருக்கு சென்றால் மாத்திரமே, மருத்துவத் துறைக்குச் செல்லலாம் என்ற மனநிலையை துணிந்து மாற்றி அமைத்தவர் மாணவன் யுவராஜ். அவர் ஒரு வரலாறு. எமது வலயத்திலும் இப் பாடசாலையிலும் முதல்முதலாக தெரிவான மருத்துவத்துறை மாணவன் யுவராஜ் என்று மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் புகழாரம் சூட்டினார் .

மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் முதன்முதலாக மருத்துவ துறைக்குத் தெரிவான, முதலைக்குடா மகா வித்தியாலய மாணவன் ரவீந்திரன் யுவராஜைப் பாராட்டும் நிகழ்வு வித்தியாலயத்தில் அதிபர் த.கோபாலபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த இந்தப் பாராட்டு விழாவில், பணிப்பாளர் அகிலா கனகசூரியம் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்திலும் யுவராஜின் விடாமுயற்சி இன்று சாதனை படைத்திருக்கின்றது. இவரிடமிருந்து ஏனைய மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது என்னவென்றால், அவர் தன்னில் நம்பிக்கை வைத்தார்; ஆசிரியர்களில் நம் நம்பிக்கை வைத்தார்; மிக கடுமையாக உழைத்தார். மூன்றுமே அவரை இன்று வைத்தியத் துறைக்கு அனுப்பியது. ஏனைய மாணவர்களும் தன்னில் நம்பிக்கை வைத்துப் படிக்க வேண்டும் என்றார்.

## பட்டப்பகலில் நகைகளும் பணமும் திருட்டு

### ஓட்டமாவடியில் சம்பவம்

எச். எம். எம் பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி எம்.கே.வீதியிலுள்ள வீடொன்றில், நகைகளும் பணமும் திருடப்பட்டுள்ள சம்பவம் நேற்று (26) இடம்பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் வெளியில் சென்றதை அவதானித்த திருடன், பட்டப்பகல் நேரத்தில், ஜன்னல் வழியாக வீட்டுக்குள் நுழைந்து, அலுமாரியில் இருந்த பத்து பவுண் நகைகளையும் ஐம்பதாயிரம் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

திருட்டில் ஈடுபட்ட திருடன், அவ் வீட்டின் மின்விசிறியை போட்டவாறு திருட்டில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



"நவீன மாயையில் இருந்து விடுபட்டு,

## பாரம்பரியத்துக்குள் உள்நுழைவோம்"

பைஷல் இஸ்மாயில்

நவீன உற்பத்திகளால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு செயற்கைச் சூழலுக்குள் நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளதால், பாரம்பரிய உற்பத்திகள் மங்கி மறைந்து வருகின்றன என்று குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கிராமிய சிறு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில், குச்சவெளி பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமியக் கைத்தொழில் பொருட்களின் சந்தையும் கண்காட்சியும் நேற்று (26) குச்சவெளி பிரதேச செயலாளர் கே. குணநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உள்ளூர் கைத்தொழில் உற்பத்தியாளர்களின் சந்தையுடனான கண்காட்சிக் கூடத்தை திறந்து வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது; நவீன, அவசர உற்பத்திகளின் ஆக்கிரமிப்பின் விளைவாக உள்ளூர் கிராம உற்பத்திகளுக்கு தேசிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பது சவாலாக உருவெடுத்துள்ளது. தற்போதைய நவீன அவசர உலகில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள், சூழலுக்கும் ஆரோக்கியத்துக்கும் கேடு விளைவிக்கின்ற போதும் நம்மில் அநேகம் பேர், அவசர உலகப் போக்கில் அவற்றையே விரும்புகின்றோம்.

நவீன மாயையில் இருந்து விடுபட்டு, எமது பரம்பரியத்துக்குள் மீண்டும் நாம் உள்நுழைவதன் மூலம், நாமும் எமது எதிர்கால சந்ததியும் நீடித்து நிலைக்கக் கூடியதான இயற்கைக்கும், கேடு விளைவிக்காத சிறந்த சூழலுக்கும் மாறிவிட பெரும் வாய்ப்பாகும் என்றார்.

இந்தச் சந்தையும் கண்காட்சியும் காலை 9.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

“கல்வி இராஜாங்க அமைச்சு

# எனக்கு கிடைத்த அமைச்சு அல்ல”

## அதிரடியாக அறிவித்தார் இராஜாங்க அமைச்சர்

■ சு.சுரேந்திரன்



எனக்கு கிடைத்துள்ள இந்த இராஜாங்க அமைச்சானது, எனக்கு கிடைத்த அமைச்சல்ல; எமது முழு சமூகத்துக்குமான அமைச்சாகும். எனவே, இந்த அமைச்சின் ஊடாக மலையகத்தின் அனைத்து தமிழ் பாடசாலைகளிலும் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, எம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த நான் முழுத் துடிப்போடு முழு மூச்சாகச் செயற்படுவேன் என, கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

கல்வி இராஜாங்க அமைச்சரை வரவேற்கும் நிகழ்வு, பசறை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மலையகம் மட்டுமல்லாது வடக்கு, கிழக்கு,சப்ரகமுவ மாகாணங்களில் காணப்படும் வசதிகுறைந்த பாடசாலைகளின் வளச்சிக்கு, என்னுடைய அமைச்சின் ஊடாக பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கல்வி இராஜங்க அமைச்சின் நியமனத்தை வழங்கும் போது, தம்மிடம் மலையக பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கும் ஏனைய பிரதேச தமிழ்ப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் தாங்கள் மிகுந்த உத்வேகத்துடன் பணியினை முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதி கூறியதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, மலையகப்பகுதியில் காணப்படும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் ஏனைய அமைச்சுகளோடு கலந்துரையாடி தம்மால் முடிந்த தீர்வுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மேலும் தெரிவித்தார்.

பசறை பிரதேச அமைப்பாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில், பசறை பிரதேச பெருந்தோட்ட பகுதியை சேர்ந்த தோட்ட தலைவர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துக்கொண்டனர்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில்

# தெளிவுபடுத்தல் செயலமர்வு

■ என்.ஆராச்சி



அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையைப் பலப்படுத்துவது தொடர்பில் பிரதேச ரீதியாக ஊடகவியலாளர்களைத் தெளிவுப்படுத்தும் வேலைத்திட்டம் கேகாலையில் நடைபெற்றது.

கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய தலைமையில், இந்தச் செயலமர்வு நடைபெற்றதுடன், இதன்போது அனர்த்தங்கள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தல், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் கிராமிய மட்டங்களில் பிரசாரங்களை முன்னெடுத்தல், உயிர், சொத்து பாதிப்பை குறைத்தல் என்பவை தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டன.

கேகாலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவால் இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

# கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

■ ஆ.ரமேஸ்

ஹைபொரஸ்ட், பிரேம்லி தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய், கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


பத்து நாள்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து காணாமல்போன 56 வயதுடைய கருப்பையா சரோஜா என்பவரே, நேற்றுமுன்தினம் (25) மாலை சடலமாக மீட்கப்பட்டதாக ஹைபொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், குறித்த பெண்ணின் வீட்டுக்கு அருகிலிருக்கும் விவசாய காணியில் அமைக்கப்பட்டுள்ள ஆழமான கினற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வலப்பனை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.மோகனராஜன் சம்பவ இடத்திற்கு வருகை தந்து, மரண விசாரணையை மேற்கொண்டதை அடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கினிகத்தேனை விபத்தில்

# மூவர் காயம்



■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

அதிவேகத்துடன் சென்ற கெப் வண்டி, ஓட்டோடனும் காருடனும் மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, காரில் பயணித்த இருவரும் கெப் வண்டியின் சாரதியும் காயமடைந்து, நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கினிகத்தேனை, அம்பகமுவ பிரதேசத்தில் இந்த விபத்து நேற்றுமுன்தினம் (25) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பிலான விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கண்டியில் நீர் கட்டணம் அதிகரிப்பு

■ ஷேன் செனவிரத்ன

கண்டி மாநகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்றனவர்களுக்கு விநியோகிக்கப்படும் நீர் கட்டணத்தை அதிகரிப்பதற்கு கண்டி மாநகர சபை தீர்மானித்துள்ளது. நகர சபைக்கு மாதாந்தம் ஏற்படும் ஒரு கோடி அல்லது ஒன்றரை கோடி ரூபாய் நட்டத்தை ஈடுசெய்யும் வகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் நீர் கட்டணத்தை 30 சதவீதத்தில் இருந்து 55 சதவீதம் வரையிலும் உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மாநகர சபையின் பிரதி மேயர் இலஹி ஆப்தீன் தெரிவித்துள்ளார்.

விசேட சபையமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த யோசனையில் சில திருத்தங்களை மேற்கொண்டு, ஒக்டோபர் 15ஆம் திகதி முதல் அமல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறைந்தளவு நீரை பயன்படுத்துவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கும் நீரை ஆகக் கூடுதலான அலகு பயன்படுத்துவோருக்கு கூடுதலான சதவீதத்தில் கட்டணத்தை அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் வணக்கஸ்தலங்களில் இருந்து அறவிடப்படும் நீர் கட்டணம் அதிகரிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி மாநகர சபைக்கு உரிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயந்திரத்துக்கான மின்கட்டணம், க்ளோரின் ஆகியவற்றின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட இன்னும் பல காரணங்களால் மாநகர சபைக்கு மாதாந்தம் பெரும் நட்டம் ஏற்படுகின்றது. அவற்றை தவிர்ப்பதற்கும். மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கும் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.







# நவராத்திரிவிழா ஆரம்பம்

நவராத்திரி விழாவின் முதல் நாள் வழிபாடுகள் நேற்று (26) தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் பாடசாலையில் நடைபெற்றது. கும்பம் வைக்கப்பட்டு துர்க்கை பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். (பி. கேதீஸ்)

# கரிட்டாஸ் நிறுவனம் ரூ.5,000 நிதியுதவி



நுவரெலியா மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் நன்றாக பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாதாந்தம் தலா 5,000 ரூபாய் புலமைப்பரிசிலை கரிட்டாஸ் நிறுவனம் வழங்கி வைத்துள்ளது. அவர்களுக்கான புலமைப்பரிசில் ஹட்டனில் வைத்து நேற்று (25) வழங்கி வைக்கப்பட்டது என கண்டியில் இயக்கும் கரிட்டாஸ் நிறுவனத்தின் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்துக்கு பொறுப்பான, நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிக்கலஸ் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் கல்வி பயிலும் திறமையான மாணவர்கள் இருக்கின்றனர். எனினும், அவர்களுடைய குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, உயர்தரத்துக்கு மேல் பயில முடியாத நிலைமை அவ்வாறானவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அவற்றை நிவர்த்திக்கும் வகையிலேயே இந்தப் புலமை பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

உயர்தரத்தில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றாலும் பல்கலைக்கழகத்துக்கு செல்லமுடியாத நிலைமையும் பலருக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஜீவனும் கையெழுத்திட்டார்

■ ஆ.ரமேஸ்

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்து பெறும் நடவடிக்கை ஹங்குராங்கெத்த, ரிகலகஸ்கட நகரில், நேற்று (26) காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளரும்



நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# உ/த மாணவர்களுக்கு விசேட செயலமர்வு

■ எஸ். கே. குமார்

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவ, மாணவிகளுக்கான செயலமர்வு, நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் சனிக்கிழமை (24) நடத்தப்பட்டது.

நுவரெலியா மாநகர சபையும் நுவரெலியா மாவட்ட செயலகமும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தன.

இந்தச் செயலமர்வில் நுவரெலியா மாநகர மேயர் சந்தனலால் கருணாரட்ன, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, நுவரெலியா மாநகர சபை ஆணையாளர் திருமதி சுஜீவா போதிமான உட்பட நுவரெலியா மாநகர சபை உருப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# மீண்டும் கொழும்புக்கு ஏற்றப்பட்ட தேயிலை பெட்டிகள்



■ பி.கேதீஸ்

மஸ்கெலியா பெருந்தோட்ட யாக்கம் இ.தொ.கா வின் அனைத்து கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டதையடுத்து, மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை தோட்ட தேயிலை தொழிற்ச்சாலையிலிருந்து பொதிசெய்யப்பட்ட தேயிலை பெட்டிகள் விற்பனைக்காக லொறியில் ஏற்றப்பட்டன.

கடந்த 2 வாரங்களாக விற்பனைக்கு கொண்டு செல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்த தேயிலை பெட்டிகளை லொறியில் ஏற்றும்போது, இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன், உள்ளிட்ட பலர் வருகைத் தந்திருந்தனர்.

# ராஜபக்‌ஷர்கள் வஞ்சகர்கள் என்பதை ரணில் உணர்வார்

■ எஸ்.கணேசன்

செஞ்சோற்று கடன் தீர்க்க, சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்ததையும், ராஜபக்‌ஷர்கள் வஞ்சகர்கள் என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் உணர்வார் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அத்துடன், கட்சித் தலைவர்களின் அனுமதி இன்றியே, தேசிய பேரவைக்கு உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். மனோ கணேசன் வெளிநாட்டில் உள்ள நிலையில் அவரின் பெயர்கூட இடம்பெற்றுள்ளது எனவும் இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.

அக்கரபத்தனை பகுதியில் நேற்றுமுன்தினம் (25) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட ரீதியில் நல்லவர்; இன்றும் அவரை நாம் மதிக்கின்றோம். ஆனால், அவர் இன்று

**“ ஜனாதிபதி ரணில், தனிப்பட்ட ரீதியில் நல்லவர்; இன்றும் அவரை நாம் மதிக்கின்றோம். ஆனால், அவர் இன்று இருக்கும் இடம்தான் சரியில்லை. செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்துள்ளார்**

இருக்கும் இடம்தான் சரியில்லை. அதாவது தனி ஆளாக இருப்பதால், செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து, வஞ்சத்தில் வீழ்ந்துள்ளார்.

ராஜபக்‌ஷர்கள் வஞ்சகர்கள் என்பதையும் அவர் உணர்வார். மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ராஜபக்‌ஷர்களின் சொல்கேட்டே ஜனாதிபதி ரணில் இதனை செய்துள்ளார்.

அரசாங்கத்தில் இணைவதற்கு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், மக்கள் ஆணை இல்லாத இந்த ஆட்சியை அங்கிகரிப்பதற்கு நாம் தயாரில்லை. சர்வதேச சமூகம்கூட இந்த அரசாங்கத்தை ஏற்கவில்லை. மக்கள் ஆணையுடன் புதிய அரசாங்கம் அமைய வேண்டும். அவ்வாறு அமையும் அரசாங்கத்துக்கு நாம் ஆதரவு வழங்குவோம் என்றார்.

# வீழ்ச்சிப் பாதையில் துரிதமாகச் செல்வதற்கான அறிகுறிகள்

இப்படித்தான் வாழவேண்டுமென்ற காலம் மலையேறிவிட, எப்படியாவது வாழ்ந்து, தங்களுடைய குடும்பத்தினரையும் வாழவைக்க வேண்டுமென்ற நோக்கத்தில், பலரும் மிகவேகமாக ஓட்டிக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமை இன்னும் சில நாள்களுக்குள் வழமைக்குத் திரும்பிவிடுமென, தங்களுக்குத் தாங்களாகவே ஆறுதல் கூறிக்கொண்டு, காலத்தை கடத்துவோரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

கடந்த காலங்களில், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திலும் பிராந்திய காரியாலயங்களிலும் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்காகவும் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முன்பாகவும் இருந்த வரிசைகள், இன்னுமே குறையவில்லை. எந்தவொரு நாட்டுக்காவது போய்விடவேண்டுமென படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டைவிட்டு தப்பியோடிவிட வேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்தை மட்டுமே கொண்டு செயற்படுபவர்களால், இந்நாட்டுக்கு எவ்விதமான விமோசனமும் கிடைக்கப்போவதில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அவர்கள், இலங்கையிலுள்ள வங்கிகளின் ஊடாக, முறையாக டொலரை அனுப்புவதை தவிர்த்து, உண்டியல்கள் அல்லது வேறு முறைமைகளின் ஊடாக பணத்தை அனுப்பிவைக்கக்கூடும். இதுவும் நாட்டுக்கு தீமை பயக்கும்.

வெளிநாடுகளுக்குச் சென்று தொழில்புரிவதில் தப்பில்லை. தங்களுடைய தொழில் திறமைக்கு ஏற்றவகையில், கொடுப்பனவுகள் வழங்கப்படாது விட்டால், மாற்று வழிகளை கையாள்வதில் தப்பில்லை. எனினும், மூளைசாலிகள் வெளியேறிவிட்டால், வெளியேறிய மூளைசாலிகள் திரும்பாவிடின், நாட்டின் எதிர்காலம் இன்னும் பல ஆண்டுகளுக்கு பின்னோக்கி சென்றுவிடும்.

நெருக்கடிக்குப் பின்னர், இதுவரையிலான காலப்பகுதியில் 500க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். அத்துடன் ஒரு மணித்தியாலத்துக்கு 32 பேர் என்ற அடிப்படையில், நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இந்தப் புள்ளிவிவரத் தகவல்கள், நாடு துரிதமாக வீழ்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருப்பதற்கான அறிகுறியாகும்.

நிதிநெருக்கடி, பொருளாதார சுமை, பொருட்களின் விலையேற்றம், சுமை ஆகியவற்றை தாங்கிக்கொள்ள முடியாததன் காரணமாகவே, பலரும் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கு படையெடுக்கின்றனர். 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் சராசரி வரிச்சுமை 42 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

ஒரு சராசரி குடும்பத்தின் வரிச்சுமை மாதத்துக்கு 28 ஆயிரம் ரூபாயாகும். அரசாங்கமானது நேரடி வரிக்கு அப்பால் சென்று, பலவகையான மறைமுக வரிகளை மக்கள் மீது சுமத்துவதால், நாட்டின் பணவீக்கம் அதிகரித்துள்ளதுடன் குடும்பத்தின் சுமைகளுக்கும் பல கோணங்களில் கடுமையான தாக்கத்தை செலுத்துகின்றன.

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகளைக் குறைத்துள்ளதாக அவ்வப்போது அறிவிப்புகள் விடுக்கப்பட்டாலும், நுகர்வோரின் கைகளுக்கு நேரடியாகச் செல்வதில்லை. விலைகள் அதிகரிக்கப்பட்டுவிட்டால் புதிய கையிருப்பு என்றும், விலைகள் குறைக்கப்பட்டுவிட்டால் பழைய கையிருப்பு என்றும் பாடும் பல்லவியை பல முதலாளிகள் இன்னுமே கைவிடவில்லை.

இவையெல்லாமே, நாடு வீழ்ச்சிப் பாதைக்கு துரிதமாகச் செல்வதற்கான அறிகுறிகளாகும் என்பதை சகலரும் நினைவில் கொள்ளவேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நெஞ்சத்தில் கண்டபடி பாரங்களைக் கூட்டி, நோகடிப்பது தேகத்துக்குச் செய்யும் குற்றம்.

தேவையற்ற எவற்றையும் வலிந்து வரவழைத்து, நிம்மதியைக் கெடுப்பவர்கள், எதற்கும் அச்சத்துடனே காலத்தை ஓட்டுகின்றார்கள்.

பிரச்சினைகள் எல்லாம் தங்களுக்கே வருவதாகக் கற்பனையில் பதிவிடுகிறார்கள். சாதாரண தடிமன் காய்ச்சல் என்றாலே, தங்கள் வீட்டையே அல்லோல கல்லோலமாக மாற்றிவிடுகிறார்கள்.

தங்களுக்கு ஏற்படும் துன்பம் மட்டுமே பெரிது என்றால், அவர்களைவிட மோசமாக வாழும் ஏழைகளின் நிலைபற்றி உணர்கிறார்களா?

இல்லங்களின் தலைவன், தலைவியைவிட அந்த வீட்டில் வேலை செய்யும் ஊழியர்கள், சில சமயங்களில் புத்திசாலிகளாக இருப்பதுண்டு. அவர்களது ஆலோசனையைக் கேட்பதில் வெட்கப்பட வேண்டியதில்லை.

எப்பொழுதும் இலகுவான, நேர்மையான வழியில் காலத்தைக் கழிக்க வேண்டும். வேண்டாத கறள்களை மூளையில் பதிவிடக்கூடாது.

ஏற்றதாழ்வற்ற உலகம் எதுவென, நம்மால் உறுதியாகச் சொல்லமுடியாது. அதுபற்றி ஆராயாமல், நாங்கள் அறவாழ்வை வாழ்வதையே இறைவன் விரும்புகின்றான்; உணர்க!.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

மக்களிடம் இருந்து

# துருவப்படும் அரசியல்வாதிகள்

மொஹமட் பாதுஷா

ஒர் ஊரில் முஸ்லிம் அரசியல் தலைவர் ஒருவர் உரையாற்றும்போது, “இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த, இந்தப் பெயருடைய அரசியல்வாதி இல்லையென்றால் கூட, இந்தக் கட்சி வளரும்” என்று கூறுகின்றார். இன்னுமோர் ஊரிலும் அவர் இவ்விதமான கருத்தைக் கூறுகின்றார்.

அநேகமான முஸ்லிம் தலைவர்களும் தளபதிகளும், இப்படித்தான் உரையாற்றுவதைக் கேட்கமுடிகின்றது. இதனால், அங்குள்ள ஆதரவாளர்களையும் வாக்களித்த மக்களையும் தரக்குறைவாக எடை போடுகின்ற நிலையும் உருவாகியுள்ளது. இது முஸ்லிம் அரசியலில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது; இன்னும் ஏற்படுத்திக் கொண்டும் இருக்கின்றது.

சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தில், முஸ்லிம்கள் பெருந்தேசியக் கட்சிகளை முழுமையாகச் சார்ந்தே அரசியல் செய்தனர். பின்னர், தமிழ்த் தேசியத்தோடு இணைந்தும் சிறு தூரம் பயணித்தனர்.

தென்னிலங்கையிலும் வடக்கு, கிழக்கிலும் முஸ்லிம்கள் ஏற்கெனவே அரசியல் மயப்படுத்தப்பட்டு இருந்தாலும், முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கத்துக்குப் பின்னரான அரசியல்மயப்படுத்தல் என்பது, வேறு விதத்தில் அமைந்திருந்தது.

இது வடக்கு, கிழக்கை மையமாகக் கொண்டிருந்தாலும், மறைந்த எம்.எச். எம் அஷ்ரப் கோலோச்சிய காலத்தில், அது கொழும்பைக் கூட அதிரவைக்கும் வல்லமை பெற்றிருந்தது.

இதற்கு அடிப்படைக் காரணம் முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி எனச் சொல்ல முடியாது. அந்தக் காலத்தில், யார் இவ்வாறான ஒரு கட்சியை ஆரம்பித்திருந்தாலும் அது, கணிசமான வெற்றியைப் பெறும் களநிலை இருந்தது என்பதே நிதர்சனமாகும்.

உண்மையில், அதன் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப், மக்களை சார்ந்து அரசியல் செய்ததும், அவருக்குத் துணையாக அக்காலத்தில் இருந்தவர்களின் அணுகுமுறைகளும் இதற்கு முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

ஒவ்வோர் ஊரிலும் உள்ள ஒவ்வொரு பொதுமகனும், கட்சிக்கு அவசியமானவர் என்று அவர் கருதினார். ஆயிரம் பேர் நிறைந்த கூட்டத்திலும் கூட நிற்கின்ற ஆதரவாளர்களை, தனித்தனியாக அடையாளம் காணும் ஆற்றல் அவருக்கு இருந்ததாகச் சொல்வார்கள்.

அதுமட்டுமன்றி, ஏதோ ஓர் அடிப்படையில் மக்களை அடிக்கடி சந்திக்கக் கூடியவராகவும், விரும்பும் வேளையில் மக்கள் சென்று சந்திக்க முடியுமான ஓர் அரசியல் தலைவராகவும் இருந்தார்.

பின்வந்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள், தளபதிகள் போன்றவர்களிடத்தில் இந்தப் பண்பு அடிப்படையில் பெரும்பாலும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

தேர்தல் காலத்தில் அல்லது தமக்கு தேவையான காலத்தில், ‘எங்கவீட்டுப் பிள்ளை’ எம்.ஜிஆர் போல ஆகிவிடுகின்ற முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள், காரியம் முடிந்த பிறகு ‘மாடிவீட்டு மைனர்’ போல மாறி விடுகின்றமை வழக்கமாகி விட்டது.

தேர்தல் முடிந்த பிறகு, தலைவர்களையோ எம்.பிக்களையோ மக்களால் காணக் கிடைப்பதில்லை. திடீரென அவர்கள் ஒருநாள் கடற்கரையோரமாக நடந்து வருவார்கள்; வயலில் உள்ள தேநீர் கடைகளுக்கு வருவார்கள்; திருமண வீடுகளில் தலை காட்டுவார்கள். இன்னுமொரு தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் போதுதான் பெரும்பாலும் இந்தக் காட்சிகளை காணலாம்.

ஆனால், பிறகு தேவை ஏற்படும் போது, மக்கள் அவர்களை தேடிச் சென்று சந்திக்க முடியாது போய்விடுகின்றது. மக்களுடன் கிரமமான தொடர்புகளைப் பேணக்கூடிய சரியான ஏற்பாடுகளை, முஸ்லிம் எம்.பிக்கள் இதுவரை மேற்கொள்ளவில்லை.

முஸ்லிம் சமூகத்தின் நீண்டகாலப் பிரச்சினைகள் பற்றிய சரியான ஆவணங்கள், தரவுகள் என்பன முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருப்பதற்கான அத்தாட்சிகள் இல்லை. அப்பிரச்சினைகளை தொடராக வலியுறுத்தி வருவதன் மூலம், அவற்றுக்கான தீர்வுகளை பெறவும் இல்லை.

முஸ்லிம் அரசியல்வாதிகள் தம்மோடு அறிவார்ந்தவர்களை, சமூக சிந்தனையாளர்களை, விமர்சகர்களை வைத்திருந்த காலம் மறையேறிப் போய்விட்டது.

இப்போதுள்ள எம்.பிக்களில் அநேகர், தாம் சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் கூட்டத்தையும், சமூக வலைத்தளங்களில் தமக்கு வக்காளத்து வாங்கக் கூடியவர்களையுமே புடம்போட்டு வைத்திருக்க விளைவதைக் காண முடிகின்றது.

அதுமட்டுமன்றி, அவர்களைச் சுற்றியுள்ள கூட்டம் தங்களுக்கென்றே ஒரு வட்டத்தை அமைத்துக் கொண்டு, வெளியாட்கள் யாரும் நுழைய விடாமல் தடுத்துக் கொண்டே இருப்பார்கள். இப்படித்தான் மக்கள் சார்பு அரசியலில் இருந்து பல முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்கள் தூர விலகிப் போனார்கள்; இப்போதும் தோற்றுப் போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

இதனால், மக்களும் அவர்களது வாக்குகளும் ‘கறிவேப்பிலை’ போல பாவிக்கப்படுகின்றன. ஆற்றைக் கடந்த பிறகு நீ யாரோ நான் யாரோ என்று, மக்களை கழற்றி விடுகின்ற போக்கை நெடுகிலும் அவதானிக்க முடிகின்றது. இதன் தொடர் விளைவாக, மக்கள் மனங்களில் இருந்து தலைவர்களும் தளபதிகளும் துருவப்பட்டுப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியிலேயே, சில கட்சித் தலைவர்கள் ‘யார் இல்லாவிட்டாலும் இந்தக் கட்சி வளர்ச்சியடையும்’ என்று மேடைகளில் கூறுவதைக் கேட்க முடிகின்றது. இதன்மூலம் அந்தப் பிரதேசத்தில் தன்னுடன் முரண்பட்டுள்ள அரசியல்வாதிக்கு ‘ஏதோ ஒரு செய்தியை’ அவர்கள் மறைமுகமாக சொல்ல விளைகின்றார்கள்.

இதனை அவதானித்த ஒரு பொதுமகன் இப்படிக் கூறினார். “தலைவரை கொஞ்சக்காலம் விலகச் சொல்லுங்களேன். கட்சி வளர்ச்சியடைகின்றதா, இல்லை வீழ்ச்சியடைந்து விடுமா என்று பார்ப்போம்” என்று ஹாஸ்யமாக!

அவரது வாதத்தில் உண்மை இருக்கின்றது.

ஓர் அரசியல் கட்சிக்கு அல்லது அணிக்கு, அனைவரதும் பங்களிப்பு அவசியமானது. ஒவ்வொரு வாக்காளனும் ஆதரவாளனும் முக்கியமானவன். மர்ஹூம் அஷ்ரப் அவ்வாறுதான் அரசியல் செய்தார். சேகு இஸ்ஸதீன் போன்றோரின் பிரிவுகள் இதில் விதிவிலக்கு என்றாலும், அவர் ஆதரவாளர்களை மதிப்பவராக இருந்தார்.

அதற்கு மாற்றமான போக்கே அவருக்குப் பின்வந்த முஸ்லிம் அரசியல்வாதிகளை, மக்களுக்கான அரசியலில் தோல்வியடைந்தவர்களாக ஆக்கியுள்ளது. ‘இந்தக் கட்சிக்கு எல்லோரும் தேவை’ என்று கூற வேண்டிய அரசியல்வாதிகள், ‘யார் இல்லாவிட்டாலும் கட்சி வளரும்’ என்று கூறுகின்ற எகத்தாளப் போக்கால், ஒரு கட்டத்தில் மக்கள் சலிப்படைந்து போய்விடுகின்றனர்.

முஸ்லிம் அரசியலில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கு அரசியல்வாதிகளும் அவர்களுக்குக் கூடவேயிருந்து அறிவுரை சொல்கின்ற அதிமேதாவிகளுமே முழுமுதல் காரணமாகும். முஸ்லிம் சமூகத்தின் பொறுப்புவாய்ந்த தரப்புகள் இதைத் தட்டிக் கேட்க தவறியமையால், அவர்கள் இதனை ஒரு நவீன அரசியல் மாதிரியாக, வழித்தடமாக மாற்றுவதற்கான தைரியத்தை வழங்கியது.

முஸ்லிம் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை காலமும் வழங்கிய வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை என்று, அவர்களுக்கு வாக்களித்த மக்கள் கேள்வி கேட்கவில்லை.

ஜம்மியத்துல் உலமா சபை உள்ளடங்கலாக, தலைப்பிறை பார்ப்பதற்காக ஒன்றுகூடுகின்ற முஸ்லிம் அமைப்புகள், முஸ்லிம் அரசியல்வாதிகள் விட்ட தவறுகளைத் தட்டிக் கேட்கத் தவறிவிட்டன. ஒவ்வோர் ஊரில் உள்ள பள்ளிவாசல்களுக்கும் இதில் தார்மீகப் பொறுப்புள்ளது.

அதுபோல, பொன்னாடைகளுக்காகவும் சமாதான நீதிவான் பதவிகளுக்காகவும் விருதுகளுக்காகவும் அலைகின்ற பிரிவினர், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் சீரழியக் காரணமானவர்களுக்கு எதிராக எழுந்து நிற்க தைரியம் கொள்ளவில்லை.

கல்விமான்கள், புத்திஜீவிகள், புதுமை படைக்கப் போவதாகக் கூறுகின்ற தரப்பினர் யாரும், அரசியல் பிரதிநிதிகளிடம் கேள்வி கேட்கத் துணியலில்லை. சொல்லப்போனால், அரசியல்வாதிகளின் தவறுகளை சுட்டிக்காட்டுவது கூட, ‘தெய்வக் குற்றம்போல’ மாற்றப்பட்டிருப்பதை என்னசொல்ல?

மிக முக்கியமாக, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை பெரும் எதிர்பார்ப்புகளோடு மறைந்த தலைவர் எம். எச். எம் அஷ்ரப் நிறுவினார். ஆனால், அவரது கனவுப் பாதையில் அப்பல்கலைக்கழகம் செல்கின்றதா என்ற கேள்வி, பலருக்கும் உள்ளது.

இலங்கை அரசியலில், பல்கலைக்கழகங்களின் வகிபாகம் அளப்பரியது. சிங்கள மக்கள் சார்பு அரசியல் கருத்தியல்களின் விளைநிலங்களாக தென்னிலங்கை பல்கலைக்கழகங்கள் இன்னும் இருக்கின்றன.

சமகாலத்தில், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவை தமிழர் அரசியலை வழிநடத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க வகிபாகத்தை எடுத்திருக்கின்றன. ஓர் அழுத்த சக்தி போலவும் விமர்சகர் குழு போலவும் அவை செயற்படுகின்றன.

இதனையொத்த கனவுகளோடு, முஸ்லிம்கள் வாழும் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஆரம்பத்தில் முஸ்லிம் சமூக அரசியலில் ஒரு தாக்கத்தை செலுத்த முற்பட்டதை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆயினும், கடந்த 20 வருடங்களாக முஸ்லிம் அரசியலை ஒழுங்குமுறைப்படுத்துவதில், அதற்கான வழிகாட்டியாக செயற்படுவதில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவ, ஆசிரியர் சமூகமானது, குறிப்பிடத்தக்க பணியை ஆற்றியதாக ஆறுதலடைய முடியாத நிலையே உள்ளது.

இந்தப் பின்னணியிலேயே, மக்களை மறந்த அரசியல்வாதிகள் பெருவளர்ச்சி கண்டிருப்பதுடன், ‘லீடர்’களை விட ‘டீலர்’கள் அதிகளவில் உருவாகியுள்ளதையும் காணமுடிகின்றது. இது முஸ்லிம் அரசியலை இன்னும் கெடுத்து, குட்டிச்சுரவாக்கியுள்ளது.

முஸ்லிம் அரசியல்வாதிகளின் மக்களை மறந்த அரசியல் போக்கிற்கு, அவர்களது தவறுகளைக் கண்டுகொள்ளாத சமூகத்தின் மௌனமும் மிக முக்கிய வினையூக்கியாக அமைந்திருக்கின்றது. இந்த மௌனம் பலமாக கலையப்பட வேண்டும்.

## கடிதங்கள்

### பொலிஸாரின் துணையுடன் மணல் அகழ்வு


கிளிநொச்சி மாவட்டத்தில், பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்புடன், நாளாந்தம் நூறுக்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில், சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து செல்லப்படுவதாக, விவசாயிகளால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோர பிரதேசமாகவும் அதிக விவசாய நிலங்களை கொண்ட பிரதேசமாகவும் காணப்படும் உருத்திரபுரம், குஞ்சுப்பரந்தன், நீவில், புளியம்பக்கணை, ஊரியான், கோரக்கன் கட்டு போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள், விவசாய வீதிகள், வாய்க்கால்கள் என்பவற்றில், நாளாந்தம் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு, டிப்பர் வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ்வுக்கான எந்தவிதமான அனுமதிகளும் இதுவரை வழங்கப்படாத நிலையில், இவ்வாறு சட்டவிரோதமான முறையில் நாளாந்தம் 85 தொடக்கம் 100 க்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் மாவட்டத்திலிருந்து பெருமளவான மணல் கொண்டு செல்லப்படுவதாகவும் விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துணையுடனே, மாவட்டத்தில் இவ்வாறு விவசாய நிலங்களிலும் ஆற்றுபடுக்கைகளிலும் சட்டவிரோதமான மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது என்றும் விவசாயிகளால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

யது பாஸ்கரன்



நடிகை அமலா பால் லேட்டஸ்ட் புகைப்படங்கள் லைக்குகளை குவித்து வருகிறது. நடிகை அமலா பால் பல இடங்களுக்கு டூர் சென்று இன்ஸ்டாகிராமில் புகைப்படங்களை வெளியிடுவார். மாலத்தீவுக்கு சென்றிருந்த போது பிடிக்கப்பட்ட படங்கள் வைரலாகி வருகின்றன. அமலா பால் பீச்சிற்கு ஏற்ற காஸ்டியூம் அணிந்துள்ளார். இதில் ஹைலைட்டே அவரின் கூலிங் கிளாஸ் தான்.

# தாறுமாறான லுக்கில்

திருச்சி

# போத்தலில் பெட்ரோல், டீசல் விற்கத் தடை

தமிழகத்தில் கடந்த சில நாள்களாக பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக, தமிழக முழுவதும் பல்வேறு இடங்களில் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ் நிர்வாகிகள் வீடுகள், அலுவலகங்களில் கார் எரிப்பு மற்றும் பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று

இந்நிலையில், இதன் எதிரொலியாக பெட்ரோல் விற்பனை நிலையங்களில் கேன் மற்றும் போத்தல்களில் பெட்ரோல், டீசல் விற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை

# பட்டாசு வெடிக்க நேரக் கட்டுப்பாடு

தீபாவளிக்கு பட்டாசு வெடிப்பதற்கான நேரக் கட்டுப்பாடு குறித்து 28ஆம் திகதி ஆலோசனை நடத்த உள்ளனர். வருவாய்த்துறை, தொழிலாளர்நலத்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் ஆலோசனையில் பங்கேற்கின்றனர். தலைமைச் செயலகத்தில் நடைபெற உள்ள கூட்டத்தில் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

மும்பை

# அடுத்தடுத்து இடிந்து விழுந்த 7 குடியிருப்புகள்

மும்பையின் 'வில் பார்லி' பகுதியில் ஏழு குடியிருப்புகள் அடுத்தடுத்து திடீரென்று நேற்று முன்தினம் இரவு (25) இடிந்து விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இவ்விபத்தின் போது குடியிருப்பு வாசிகள் யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மும்பை மாநகராட்சி அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று அருகில் இருந்த 24 கட்டடங்களில் வசித்த மக்களை உடனடியாக பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தியுள்ளனர்



எனவும் அவர்கள் அனைவரும் அருகில் உள்ள பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குடியிருப்புகள் இடிந்து விழுந்தமைக்கான காரணம் குறித்தும் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்திர பிரதேசம்

# தொலைபேசியால் நேர்ந்த விபரீதம்

## பெண் மீது கூட்டுப் பாலியல் வன்கொடுமை

நூதன முறையில் பெண்ணை ஏமாற்றி அவரைக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம், உத்திர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உத்தர பிரதேசத்தின், கிராமமொன்றில் தனது கணவருடன் இளம்பெண் ஒருவர் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், அதே கிராமத்தில் வசித்து வரும் இளைஞர் ஒருவருடன் அப்பெண் நட்புடன் பழகி வந்துள்ளார். நாளடைவில் அவருக்கு அந்நபர் தொலைபேசியொன்றை வாங்கிக் கொடுத்துள்ளார். அதன் பின்னர் இருவரும் தொலைபேசியில் அடிக்கடி உரையாடி வந்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவ தினத்தன்று பெண்ணின் வீட்டுக்கு வந்த குறித்த நபர், உங்களுடைய கணவர் அழைக்கிறார் எனக் கூறி அப் பெண்ணை ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். அப்பகுதியில் ஏற்கெனவே 4 பேர் இருந்துள்ளனர். பின்னர் ஐவரும் கட்டாயப்படுத்தி மது அருந்த வைத்து, பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.



## 6 பூகம்பங்களை கடந்து நிற்கிறது

# தஞ்சை பெரிய கோவில்



'தஞ்சை பெரிய கோயில் 6 பூகம்பங்களை கடந்தும் நிற்கிறது' என சோழர்களின் பெருமையை நடிகர் விக்ரம் விளக்கி பேசிய காணொலி வைரலாகி வருகிறது.

கல்கியின் நாவலை அடிப்படையாக கொண்டு இயக்குநர் மணிரத்னம் உருவாக்கியுள்ள 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் வரும் 30-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதையொட்டி படக்ககுழுவினர் படம் தொடர்பான ப்ரமோஷனில் பிஸியாகியுள்ளனர். அந்த வகையில் மும்பையில் நடைபெற்ற புரமோஷன் நிகழ்ச்சியில் பொன்னியின் செல்வன் படக்குழுவினர் கலந்து கொண்டு செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்துப் பேசினர். அப்போது பத்திரிக்கையாளர் ஒருவர், "வரலாற்றை தெரிந்து கொள்வது எந்த அளவு முக்கியமானது?" என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த போது நடிகர் விக்ரம், "நாம் எகிப்தில் உள்ள பிரமீடுகள் பற்றி பேசுகிறோம். அதை எப்படி கட்டி இருப்பார்கள் என்றெல்லாம் யோசிக்கிறோம். ஆனால் நம் இந்தியாவில் நிறைய கோயில்கள் இருக்கின்றன.



## நடிகையின் தொடையை


# பிடித்த கூல் சுரேஷ்

சமீபத்தில் கூல் சுரேஷ் வெந்து தணிந்தது காடு படத்திற்கு ப்ரோமோஷன் பணியில் ஈடுபட்ட போது இவரது கார் கண்ணாடி உடைக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்த, தற்போது கூல் சுரேஷ் வெளியிட்டுள்ள போட்டோ சூட் புகைப்படம் வைரலாக பார்க்கப்பட்டு வருகிறது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் சினிமாவில், வில்லன் கதாபாத்திரத்திலும், காமெடி ரோலிலும் நடித்து வருபவர் கூல் சுரேஷ். ஆனால் சூரி, யோகி பாபு, ரோபோ ஷங்கர் போன்ற நடிகர்களின் வருகையால் இவரை போன்ற சிறிய நடிகர்கள் வெளியே தெரியாமலேயே போனார்கள். திரைப்படங்களில் இவரை பார்க்க முடியவில்லை என்றாலும், சமூக வலைத்தளங்களில் மிகவும் ஆக்டிவாக செயற்பட்டு வருகிறார் கூல் சுரேஷ்.

# ஜாக்குலினுக்கு இடைக்கால பிணை

நடிகை ஜாக்குலினுக்கு புதுடெல்லி நீதிமன்றம் இடைக்கால பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது. ரூ.200 கோடி மோசடி வழக்கில் இடைத்தரகர் சுகேஷுடன் தொடர்புடையவர் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ் என்பது குறிப்பிடத்தக்கது.



# தொடர்ந்து கிளாமர்



நடிகை ரம்யா பாண்டியன் இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட மொட்டை மாடி போட்டோ ஷூட் மூலம் ஓவர் நைட்டில் பிரபலமானார். பிக்பாஸ் சீசன் 4 நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்துக்கொண்டார். பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு பிறகு ரம்யாவுக்கு திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

அமேசான் ப்ரைமில் வெளியான 'ராமே ஆண்டாலும் ராவணே ஆண்டாலும்' படத்தில் நடித்திருந்தார். மம்முட்டி நடிப்பில் உருவாகும் 'நண்பகல் நேரத்து மயக்கம்' படம் மூலம் மலையாள சினிமாவில் அறிமுகமாகவுள்ளார் ரம்யா பாண்டியன்.

சென்னை



## அ.தி.மு.க அலுவலகத்தில்

# ஆவணங்கள் மாயம்

### ஓபிஎஸ் ஆதரவாளரிடமிருந்து மீட்பு

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (அ.தி.மு.க ) அலுவலகத்தில் இருந்து காணாமற் போன அனைத்து ஆவணங்களும் ஓ. பன்னீர்செல்வம் (ஓ.பி.எஸ்) ஆதரவாளரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாக சி.பி.சி.ஐ.டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.க.வில் இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமியைத் தெரிவு செய்வதற்காகக் கடந்த ஜூலை மாதம் 11ஆம் திகதி அக்கட்சியின் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

அப்போது, இராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்தைக் கைப்பற்றும் முயற்சியாக கட்சி அலுவலகத்துக்கு வந்த ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் கட்சி அலுவலகத்தின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்தனர்.

இதனால் ஓ.பன்னீர்செல்வம் - எடப்பாடி பழனிசாமி ஆதரவாளர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. இம்மோதலில் 50 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இதனையடுத்து சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் அ.தி.மு.க அலுவலகத்துக்கு 'சீல்' வைத்தனர்.

இதை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி தரப்பிலும், ஓ.பன்னீர்செல்வம் தரப்பிலும் சென்னை நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கில் எடப்பாடி பழனிசாமிக்கு சாதகமாக அண்மையில் தீர்ப்பு வந்தது. இந்நிலையில், அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் சிபிசிஐடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு தகவல்களை சேகரித்தனர்.

தமிழகம்


# ஒன்லைன் ரம்மிக்குத் தடை

ஒன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான சட்டத்திற்கு தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

நேற்று (26) காலை முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது.

இதன்போது ஒன்லைன் விளையாட்டு தடை சட்டத்திற்கு ஒப்புதல் தரப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அது மட்டுமல்லாமல் ஒன்லைன் விளையாட்டுகளில் ஒரு சில விளையாட்டுகளை மாத்திரம் தடை செய்யவுள்ளதாகவும், ஏனைய விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தவுள்ளதாகவும் விரைவில் இதற்கான சட்டம் பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஹிமாசல்

# பஸ் விபத்தில் 7 பேர் உயிரிழப்பு

ஹிமாசலில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ், பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிமாசல பிரதேச மாநிலம், குலு மாவட்டத்தில் கியாகி அருகே நேற்று முன்தினம் (25) இரவு சுற்றுலாப் பயணிகள் 17 பேரை ஏற்றிச் சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 10 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டி20 போட்டி

# இந்திய அணி அபார வெற்றி

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் பங்கேற்றது.

இரண்டு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றதால் டி20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியிருந்தது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவதும் இறுதியானதுமான டி20 போட்டி ஐதராபாத்தில் ராஜீவ் காந்தி ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மா பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணி தொடக்க வீரர் கேமரூன் கிரீன் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அணித்தலைவர் ஆரோன் பின்ச் 7 ஓட்டங்களிலும், ஸ்டீவ் ஸ்மித் 9 ஓட்டங்களிலும், மேக்ஸ்வெல் 6 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து 187 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி விளையாடிய இந்திய அணியில் தொடக்க வீரர் கே.எல். ராகுல் ஓர் ஓட்டத்துடன் வெளியேற, அணித்தலைவர் ரோகித் சர்மா 17 ஓட்டங்களை எடுத்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்து அதிரடியாக விளையாடிய விராட் கோலி 48 பந்துகளில் 63 ஓட்டங்களும், சூரியகுமார் யாதவ் 36 பந்துகளில் 69 ஓட்டங்களும் எடுத்தனர்.ஹர்திக் பாண்ட்யா 25 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் களத்தில் இருந்தார். இந்திய அணி 19.5 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்களை எடுத்து, 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் டி20 தொடரை 2-1 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

## தில்லையடி வின் ஸ்டார் அணி சாம்பியனானது

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் Black Shine நிறுவனத்தின் அனுசரணையில் நாகாஸ் கிரிக்கெட் அணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற, அணிக்கு ஆறு பேர் கொண்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி, புத்தளம் நாகாஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் (25) நடைபெற்றது.

18 அணிகள் பங்குபற்றிய இந்தத் தொடரில் தில்லையடி வின் ஸ்டார் அணி சாம்பியன் பட்டத்தை வெற்றி கொண்ட அதே நேரம் புத்தளம் ஹை பை (Hi - Fi) அணி இரண்டாம் இடத்தை தக்க வைத்துக்கொண்டது.

தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக வின் ஸ்டார் அணியை சேர்ந்த சுராஸ் தெரிவு செய்யப்பட்டார்.

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

எச்.எம்.எம்.பர்ஸான்

மீராவோடை அல் ஹிதாயா தேசிய பாடசாலைக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கிலங்கை தன்னம்பிக்கை சமூக எழுச்சி நிறுவனத்தினால் (ESCO) Team Up இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நிறுவன பிரதிநிதியிடமிருந்து அதிபர் கே.எல்.எம்.சபாஹிர், உடற்கல்வி ஆசிரியர் றினோஸ் மற்றும் சிரேஷ்ட ஆசிரியை திருமதி பீ.எம்.. கலீல், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான டபிள்யூ.எம். சிபான், வீ.ரீ.றிகாஸ் ஆகியோர் உபகரணங்களை பெற்றுக் கொண்டனர்.





## புத்தளம் லெஜண்ட்ஸ் அணி வெற்றி

எம்.யூ.எம்.சனூன்

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிநேகபூர்வ உதைப்பந்தாட்ட போட்டியில், புத்தளம் லெஜன்ட்ஸ் அணி 3 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

புத்தளம் லெஜன்ட்ஸ் உதைபந்தாட்ட அணிக்கும் கம்பளை க்ரிஸ்டல் பெலஸ் அணிக்கும் இடையிலான போட்டி, கம்பளை சாஹிரா மைதானத்தில் நேற்றுமுன்தினம் (25) நடைபெற்றது.

புத்தளம் லெஜன்ட்ஸ் அணி சார்பில் அஹ்சன், சியானூன், ஜனொசன் ஆகியோர் தலா ஒரு கோல்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

போட்டி முடிவடைந்த பின்னர், கம்பளை க்ரிஸ்டல் பெலஸ் அணி, புத்தளம் லெஜன்ட்ஸ் அணிக்கு நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கி வைத்தது.

## கல்குடா டைவர்ஸ் அணியின் ஏற்பாட்டில் நீச்சல் பயிற்சி

எச்.எம்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பு, கல்குடா டைவர்ஸ் அமைப்பினர் ஏற்பாடு செய்த நீச்சல் பயிற்சி நிகழ்வு காயாங்கேணி கடற்கரையில் சனிக்கிழமை (24) இடம்பெற்றது.

ஸ்ரீ லங்கா லைப் காட்டின் வழிகாட்டலுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த இலவச நீச்சல் பயிற்சியில் ஆர்வமுள்ள இளைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை, அமைப்பின் ஏற்பாட்டாளர்களும் சமூக சேவை உதவியாளர்களுமான ஏ.சீ.எம். நியாஸ் ஹாஜியார், தொழிலதிபர் ஹிப்ஜாத், ஜௌபர் மெக்கானிக் ஆகியோர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் ‘கல்குடா டைவர்ஸ்’ அணியின் விசேட சுழியோடி அப்துல் மஜீத் ஹலீம், கலந்து கொண்டவர்களுக்கு நீச்சல் பயிற்சிகளை வழங்கினார்.



பங்குபற்றிய அனைவருக்கும் நீச்சல் பயிற்சியின் முக்கியத்துவம், அதனால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டது.


இப்பிரதேசத்தில் இடம்பெறும் நீர் அனர்த்தங்களின் போது நீரில் மூழ்குபவர்களை மீட்கும் பணிகளை கல்குடா டைவர்ஸ் அணியினர் களத்தில் நின்று பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் இன்னும் சிறப்பான முறையில் அதிகமான இளைஞர்களுக்கு நீச்சல் மற்றும் உயிர்காக்கும் பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளதாகவும் இவ்வமைப்பினர் தெரிவித்தனர்.

ரஷ்யா

# ரஷ்ய இராணுவ துணை அமைச்சரை நீக்கிய புடின்

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து தீவிரமாகப் பேர் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் இப்போரில் ரஷ்யாவுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவின் காரணமாக ரஷ்ய பாதுகாப்பு துணை அமைச்சர் பதவியிருந்து டிமிட்ரி புல்ககோவ்வை ரஷ்ய ஜனாதிபதி புடின் நீக்கியுள்ளார்



எனவும், அவருக்குப் பதிலாக மிகைல் மிஜின்ட்சேவ் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புல்ககோவ் 2008ஆம் ஆண்டு முதல் ரஷ்ய இராணுவ உபகரணங்களை நிர்வகித்து வந்தவர். இந்நிலையில் புதிதாக பொறுப்பேற்ற மிகைல் மிஜின்ட்சேவ், உக்ரேனில் உள்ள மரியப்போல் நகரத்தின் மீது தாக்குதல்களை நடத்த உத்திரவிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானியா

## கர்ப்பமானதை அறிந்த அன்றே பிரசவம்

பெண்ணொருவர் தான் கர்ப்பமாக இருப்பதை அறிந்த 24 மணி நேரத்துக்குள்ளேயே குழந்தையொன்றை பிரசவித்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவில் வசித்து வரும் மோலி கில்பர்ட் என்பவரே இவ்வாறு குழந்தையை பிரசவித்துள்ளார்.

குறித்த பெண்ணின் எடை கடந்த 36 வாரங்களில் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், அச்சமடைந்த அவர் வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள், அவர்



கர்ப்பமாக இருப்பதை உறுதி செய்துள்ளனர்.

எனினும் கர்ப்ப கால அறிகுறிகள் எதுவும் அவரிடம் காணப்படாத நிலையில் இச்செய்தியானது அவருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இச்செய்தி அறிந்த அன்றே அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டு குழந்தையும் பிறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ்



## படகு கவிழ்ந்ததில் 32 பேர் உயிரிழப்பு

பங்களாதேஷில், பஞ்சகர் மாவட்டத்தில், ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (25) சுமார் 70க்கும் மேற்பட்டோரை ஏற்றிச் சென்ற படகே இவ்வாறு ‘கரடோயா’ ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்தில் 32 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், மாயமானவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பங்களாதேஷில் காணப்படும், படகுகளில் பாதுகாப்பு தரம் குறைவாக இருப்பதாலும் அதிகளவில் சுமை ஏற்றிச் செல்வதாலும் அடிக்கடி படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா


## வைரங்களை இறக்குமதி செய்யத் தடை?

ரஷ்யாவின் வைரங்களை இறக்குமதி செய்யத் தடை விதிக்க வேண்டும்` என ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

ரஷ்யாவின் வைரங்களை உலகின் மிகப் பெரிய வைர வர்த்தக மையமான பெல்ஜியத்தின் ஆண்டிவெர்ப்பில் இறக்குமதி செய்வதைத் தடை செய்ய வேண்டும் என போலந்து, அயர்லாந்து, லிதுவேனியா, எஸ்டோனியா, லாட்வியா ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.



எனினும் ரஷ்ய வைரத்திற்குத் தடை விதித்தால் வர்த்தக மையத்தின் 30 சதவீத வணிகம் பாதிக்கும் என்பதால் பெல்ஜியத்தின் வெளியுறவு அமைச்சகமும் ஐரோப்பிய ஒன்றியமும் இவ்விடயம் குறித்து மௌனம் காத்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உக்ரேன்

## ரஷ்ய வீரர்களை ஆதரிக்கும் செலன்ஸ்கி; எச்சரிக்கும் புடின்

உக்ரேன் மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டு வருகின்றது.

இதன் காரணமாக சுமார் மூன்று லட்சம் படை வீரர்களை திரட்ட ரஷ்ய இராணுவம் திட்டமிட்டு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேசமயம் உக்ரேனிடம் ரஷ்ய இராணுவ வீரர்கள் தானாக சரணடைந்தால் கடும் தண்டனை விதிக்கப்படும் என ரஷ்ய ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் இவ் அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களில் உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கி “ரஷ்ய வீரர்கள் சரணடைய வேண்டும். அவ்வாறு சரணடையும் ரஷ்ய வீரர்கள் பொதுமக்களை போல் நடத்தப்படுவார்கள்” எனவும் உறுதியளித்துள்ளார்.


ஐக்கிய அரபு இராச்சியம்

## அமலுக்கு வரும் புதிய சட்டம்

### மீறினால் 2 ஆண்டுகள் சிறை

ஐக்கிய அரபு இராச்சியத்தில் பொதுவெளியில் தவறவிட்ட பொருட்கள் தொடர்பான புதிய சட்டம் அமல்படுத்தப்பட்டு உள்ளது.

அந்தவகையில், பொது இடங்களில் தவறுதலாக விடப்பட்ட பொருட்களை யாரேனும் கண்டெடுத்தால், அதனை 48 மணி நேரத்திற்குள் பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் அப்பொருளை தம்முடன் வைத்திருந்தால் அவர்கள் மீது சிறை தண்டனை மற்றும் அபராதம்



விதிக்க நேரிடும்.

குறிப்பாக, அவ்வாறு வேறொருவருக்கு சொந்தமான பொருட்களை எடுத்துச் செல்வோருக்கு இலங்கை மதிப்பில் சுமார் 17,76,036 ரூபாய் அபராதமும், இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையும் விதிக்கப்படும் என அந்நாட்டு அரசு சட்டம் இயற்றியுள்ளது.

ரஷ்யா

## பாடசாலையில் துப்பாக்கிச் சூடு; 9 பேர் உயிரிழப்பு

ரஷ்யாவில் பாடசாலையொன்றில் ஆயுததாரியொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மாணவர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய ரஷ்யாவில் உள்ள உட்முர்டியா என்ற பகுதியிலே நேற்றைய தினம் (26) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## இரகசிய அருங்காட்சியகத்தை புதுப்பிக்கும் அமெரிக்கா

அமெரிக்க உளவு அமைப்பின், 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி அதன் இரகசிய அருங்காட்சியகம் புதுப்பிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்ஜீனியாவின் லாங்லி நகரில் உள்ள இவ் அருங்காட்சியகத்தில் சுமார் 600க்கும் மேற்பட்ட கலைப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக, சதாம் ஹுசைனின் தோல் ஜக்கெட், ஒசாமா பின்லேடன் பயன்படுத்திய




துப்பாக்கி, பனிப்போர் உளவு கருவிகள், செய்திகளை மறைக்கக்கூடிய ‘டெட் டிராப் ராட், சிகரெட் பக்கெட்டுக்குள் வைக்கக்கூடிய இரகசிய கெமரா போன்றவை இங்குள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால், செவ்வாய்க்கிழமை, 27 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.